இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 14-10-2024



# அலட்சிய விபத்துகள்

கடந்த ஜூலை மாதத்தில் ‘விபத்து’ ரயில்வே - என்ற தலைப்பில் தலையங்கம் தீட்டி இருந்தோம். “வந்தே பாரத் விடுவது பெருமை யல்ல, ‘விபத்தில்லாத’ ரயில்வேதான் பெருமை” என்று அப்போது சொல்லி இருந்தோம். அதற்கான முயற்சியை ஒன்றிய பா.ஜ.க. எடுத்தி ருக்கிறதா என்றால் இல்லை.

**“ரயில் விபத்துகள் வழக்கமானதுதான். தண்டவாளத்தில் மக்கள் எதை யாவது வைப்பதால் விபத்து நடைபெறுகிறது. வேண்டுமென்றே விபத்து ஏற்படுத்தப்படுகிறது” என்று ஒன்றிய அமைச்சர் லாலன் சிங் பேட்டி தந் துள்ளார். இவரைப் போன்றவர்கள் ஒன்றிய அமைச்சர்கள் ஆனதுதான் இந்த நாட்டுக்கு ஏற்பட்ட ஜனநாயக விபத்து ஆகும்.**

சென்னைக்கு அருகே உள்ள கவரைப்பேட்டையில் பாக்மதி விரைவு ரயில் மிகப்பெரிய விபத்துக்கு உள்ளானது. மைசூரில் இருந்து தர்பங் காவுக்கு சென்று கொண்டிருந்தது பாக்மதி ரயில். இது கவரைப்பேட்டை யில் நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி இருக்கிறது. 75 கி.மீட்டர் வேகத்தில் இந்த ரயில் வந்துள்ளது. 13 பெட்டி கள் தடம் புரண்டது. 7 பெட்டிகள் ரயில் பாதையின் குறுக்கே கிடந்தன.

**“கவரைப்பேட்டையில் ரயில் நிலையம் செல்ல, விரைவு ரயிலுக்கு மெயின் லைனுக்குத்தான் சிக்னல் தரப்பட்டு இருந்தது. ஆனால் மாறாக லூப் லைனில் சென்றுள்ளது. ஏற்கனவே லூப் லைனில் சரக்கு ரயில் நின்று கொண்டிருந்ததால் சிக்னலை மீறி லூப் லைனில் சென்ற விரைவு ரயில், சரக்கு ரயில் மீது மோதி விபத்துக்கு உள்ளானது” என்று ரயில்வே தெரிவித்துள்ளது. இத்தனை தொழில் நுட்பங்கள் வளர்ந்த பிறகும் இந்த மாதிரியான விபத்துக்கள் நடப்பது மிகப்பெரிய தலைகுனிவு ஆகும்.**

இது எப்போதோ நடப்பது அல்ல. இத்தகைய விபத்துகள் நடப்பது வழக்கம் ஆகிவிட்டது. ஜூலை 18 முதல் 31 ஆம் தேதி வரை இந்தியா வின் பல்வேறு மாநிலங்களில் தொடர்ந்து விபத்துகள் நடந்தது. இதன் பிறகும் இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு எடுக்கவில்லை.

2010 ஆம் ஆண்டு மே மாதம் மேற்கு வங்கத்தில் சரக்கு ரயிலும் விரைவு ரயிலும் மோதிக்கொண்ட விபத்தில் 148 பயணிகள் உயிரிழந் தனர். 2023ஆம் ஆண்டு ஜூன் 2 ஆம் தேதி ஒடிசாவின் பாலசோர் மாவட்டத்தில், கோரமண்டல் விரைவு ரயில், பஹானாகா பஜார் நிலை யம் அருகே விபத்துக்குள்ளானது. இதில் இருபதுக்கும் மேற்பட்ட பெட்டி கள் தடம் புரண்டன. இந்த விபத்தில் 296 பேர் உயிரிழந்தனர். 2023ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் தேதி ஆந்திரப் பிரதேச மாநிலம், விஜயநகரம் மாவட்டத்தில், கொத்தவலசா சந்திப்பு ரயில் நிலையம் அருகே, விசாகப்பட்டினம் பலாசா பயணிகள் ரயில் மோதிய தில், விசாகப்பட்டினம்ராயகடா பயணிகள் ரயில் தடம் புரண்டது. 14 பேர் உயிரிழந்தனர். இந்த ஆண்டு ஜூன் 17ஆம் தேதி மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங் மாவட்டத்தில் உள்ள நியூ ஜல்பைகுரி அருகே சரக்கு ரயிலும், விரைவு ரயிலும் மோதிக்கொண்ட விபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். இப்படிப்பட்ட விபத்துகள் தொடர் கதையாகவே இருக்கிறது.

2014 முதல் 2024 வரை சுமார் 638 ரயில் விபத்துகள் நடந் துள்ளன. சராசரியாக ஆண்டுக்கு 71 ரயில்கள் தடம் புரண்டுள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த அக்கறையாவது அவர்களுக்கு இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. இந்த ஆண்டு கூட நிதி நிலை அறிக்கை யில் 2 லட்சத்து 62 ஆயிரத்து 200 கோடி ரூபாய் ரயில்வேக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. இதனை வைத்தாவது செய்யும் முயற்சிகள் தொடங்கப் பட்டிருக்கிறதா என்றால் அதுவும் இல்லை.

**“பட்ஜெட் நிதி ஒதுக்கீட்டில் பெரும்பகுதி ‘கவச்’ தானியங்கி பாதுகாப்பு அமைப்பை நிறுவுதல் உள்பட ரயில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குச் செலவிடப்படும்” என்று ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அப்போது சொன்னார். இப்போதும் சொல்கிறார். இப்படி ஒவ்வொரு விபத்து நடக்கும் போதும் சொல்வார்.**

‘கவச்’ தொழில் நுட்பமானது, ஒரே ரயில் பாதையில் இரண்டு ரயில் கள் வருவதைத் தடுக்கும். இதனை அமல்படுத்துவதற்கு இந்த ஆண்டு தான் ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்று அஸ்வினி வைஷ்ணவ் கடந்த ஜூலை மாதம் சொன்னார்.

ரயில் விபத்து குறித்து 13 ரயில்வே ஊழியர்களுக்கு சம்மன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மறுமறுபடி ஊழியர்கள் மீது பழி போட்டு தப்பிக்கப் பார்க்கிறார்கள். இந்திய ரயில்வேயில் நாடு முழுவதும் சிக்னல் மற்றும் தொலைத்தொடர்பு, போக்குவரத்து துறை ஆகிய வற்றில் கணிசமான எண்ணிக்கையிலான பணியிடங்கள் நிரப்பப் படாமல் உள்ளன. இதுவும் இது போன்ற விபத்துகளுக்குக் காரணம் ஆகும்.

ஆறு நாட்களுக்கு ஒரு விபத்து என்ற விதத்தில் இரயில்வே துறை இருப்பது மிக மிக ஆபத்தானதாகும்.

நாட்டின் மிகப்பெரும் போக்குவரத்து பொதுத் துறையான ரயில்வே துறைக்கு தனி வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்து வந்த முறையை மாற்றி, பொது வரவு செலவு திட்டத்தில் சேர்த்து விட்டது பா.ஜ.க. அரசு. ரயில்வே துறையை அலட்சியப்படுத்தியதற்கு இதுதான் தொடக்கம். இதுவரை 1465 கிலோமீட்டருக்குதான் ‘கவச்’ பொருத்தப்பட்டிருக்கிறது. இந்த வேகத்தில் பொருத்தப்பட்டால் அனைத்து இரயில் பாதைகளிலும் கவச் பொருத்த இன்னும் எத்தனை ஆண்டுகாலம் தேவைப்படும் என்று தெரியவில்லை. **இதுதான் அலட்சியத்தின் தொடர்ச்சி. இப்போது நாம் பார்த்துக் கொண்டிருக்கும் காட்சிகள் அனைத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அலட்சியத்தால் ஏற்படும் விபத்துகளே!**



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று (13.10.2024) தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தினைப் பார்வையிட்டு, மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்பாட்டு அறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற் கொண்டார். இந்நிகழ்வின்போது மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தாரேஷ் அகமது மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கலைஞர் நூற்றாண்டுப் பூங்காவில் ஜிப்லைன் பழுதாகவில்லை!

# எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தவறான தகவலைப் பரப்புகிறார்!

## பழனிச்சாமியின் ஆத்திரம் எதற்கு? என்பதை விளக்கி – வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கண்டன அறிக்கை!

**சென்னை, அக்.14-**

**கதீட்ரல் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு பூங்காவில் அமைந்துள்ள ஜிப் லைன் பழுதாக வில்லை - அது பூங்காவின் புவி ஈர்ப்பு சக்தியை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி ஆத்தி ரம் எதற்காக தெரியுமா? என்பதை விளக்கி வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

இதுகுறித்து அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கலைஞர் பூங்காவில் ஜிப்லைன் பழுதானதற்காக எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்திருக்கிறார். அவ ருக்கு வேண்டப்பட்ட தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தியின் ஆக்கிரமிப்பில் இருந்த அரசு நிலத்தை தி.மு.க. அரசு மீட்டு கலைஞர் பூங்காவை உரு வாக்கினால் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு ஏன் கோபம் வராது?

ஜெயலலிதாவின் ஆரம்பக்கால தோழி லீலா. ஜெயலலிதாவிடம் நெருங்கிப் பேசக்கூடியவர். ஆல் இந் தியா ரேடியோவில் பணியாற்றிக் கொண்டிருந்தார். போயஸ் கார் டனை சசிகலா ஆக்கிரமிக்கத் தொடங்கியிருந்த நேரத்தில், வழக் கம் போலவே போனார் லீலா.

ஆனால், அங்கே அவருக்குப் பழையமரியாதைகிடைக்கவில்லை. தோட்டக்கலை தொடர்பான புத்தகங்களை லீலாவிடம் கேட்டிருந் தார் ஜெயலலிதா. அவற்றை லீலா வும் அனுப்பியிருந்தார். அதுபற்றி எந்தத் தகவலும் வராததால் கார்ட னுக்குப் போனார் லீலா. “மேடம் வரச் சொல்லியிருந்தார்கள்” எனச் சொல் லியிருக்கிறார். “காத்திருங்கள்” என பதில் வந்தது. மூன்று மணி நேரத் துக்கும் மேலாக கார்டன் ரிசப்ஷனில் காத்திருந்தும் அவருக்கு ஜெயலலிதா வைச் சந்திக்கும் வாய்ப்பு வாய்க்க வில்லை. கடைசியாக, “அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. அவர் இன்று யாரையும் பார்க்க மாட்டார். பிறகு வாருங்கள்” என சொல்லி அவரை சசிகலா அனுப்பிவிட்டார். “அவர் தான் என்னை வரச் சொல்லியிருந் தார்” என லீலா சொன்னது எடுபட வில்லை. அவர் பக்கத்தில் அமர்ந்திருந்த ஜெயலலிதாவுக்கா



க் காத்திருந்த வலம்புரி ஜான் மட் டும் கிளம்பவில்லை.

சசிகலா போனபிறகு தனக்கு வேண்டப்பட்ட லீலாவிடம் “என் னம்மா ஆச்சு” எனக் கேட்டிருக்கி றார் வலம்புரி ஜான். விரக்தியாகச் சிரித்துவிட்டுப் போனார் லீலா. அதன்பிறகு அவரால் கார்டன் பக் கமே தலை வைக்க முடியவில்லை. “லீலா வந்து போன தகவல் ஜெயல லிதாவிடம் சொல்லிவிட வேண் டாம்” என வலம்புரி ஜானிடம் கேட் டுக் கொண்டார் சசிகலா.

தோட்டக்கலை தொடர்பான புத்த கங்களையும், அவற்றை எழுதிய கிருஷ்ணமூர்த்தி என்பவரையும் பிறகு ஜெயலலிதாவுக்கு சசிகலா அறிமுகம் செய்து வைத்தார். ‘தோட் டக்கலை பற்றிய செய்திகளை ஜெய லலிதாவுக்குச் சொல்வதாக இருந் தாலும் தனக்கு வேண்டப்பட்ட கிருஷ்ண மூர்த்தி மட்டுமே சொல்ல வேண்டும்.

**முதல்வரால் ரூ.1000 கோடி மதிப்பிலான நிலம் மீட்பு!**

தனக்கு வேண்டப்பட்டவர் மட் டும்தான் ஜெயலலிதாவின் பக்கத் தில் போக முடியும் என சசிகலா போட்ட கணக்கில் காணாமல் போனார் லீலா. அந்த தோட்டக் கலை கிருஷ்ண முர்த்தி ஆக்கிரமித் திருந்த 1000 கோடி ரூபாய் மதிப்பு நிலத்தை அரசு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு மீட்டிருக்கிறது.

**கிருஷ்ணமூர்த்தி ஆக்கிரமித்த ரூ.1000 கோடி மதிப்பிலான அரசு நிலம்!**

சசிகலாவுக்கு வேண்டப்பட்டவ ரும் அதிமுக பிரமுகருமான தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி யால் ஆக்கிரமிக்கப்பட்ட அரசுக்கு சொந்தமான 1,000 கோடி மதிப்பி லான 115 கிரவுண்ட் நிலம் அதிரடி யாக மீட்கப்பட்டது. நீண்டகால சட் டப் போராட்டத்திற்குப் பிறகு ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலத்தை முழுமையாக மீட்டது தமிழ்நாடு அரசு. அடேங்கப்பா.. இத்தனை வருஷ ஆக்கிரமிப்பா என மலைக்க வைக்கும் அந்த ஆக்கிரமிப்பின் கதையை பார்ப்போம்.

சென்னை அண்ணா மேம்பாலம் அருகே, கதீட்ரல் சாலையில் தமிழ் நாடு அரசு தோட்டக் கலை துறைக்கு சொந்தமான நிலம் 23 ஏக்கரில் பரந்து விரிந்திருந்தது. அந்த இடத்தை தோட்டக்கலை சங்கத்திற் காக 1910ம் ஆண்டு அரசு வழங்கி யது. காலப்போக்கில் அந்த நிலம் தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தியின் கைக்குச் சென்றது. ‘விவசாய தோட் டக்கலைச் சங்கம்’ என்ற ஒரு தனி யார் அமைப்பை உருவாக்கி அந்த நிலத்தைப் பயன்படுத்தி வந்தார். அந்த இடத்திற்கு பட்டா பெற்று தோட் டக்கலை கிருஷ்ணமுர்த்தி ஆக்கிர மிப்பு செய்து வைத்திருந்தார். அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற போது அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 1989ல் கலைஞர் ஆட்சியின் போது 17 ஏக்கர் நிலத்தை சட்டப்படி மீட்டகப்பட்டது. அதன்பிறகு ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா மீதி யுள்ள நிலத்தை மீட்க எந்தவித நடவ டிக்கையும் எடுக்கவில்லை.

அந்த நிலத்தை ஒட்டி உட்லன்ஸ் ட்ரைவ்இன் ஹோட்டல் இருந்தது. ஒரு காலத்தின் சென்னையின் லேண்ட் மார்க்காக அந்த ஹோட்டல் பிரபலம். காரில் அமர்ந்தபடியே விஜ பிகள் எல்லாம் வந்து அந்த ஹோட்ட லில் சாப்பிடுவார்கள். அங்கு குத் தகை அடிப்படையில் செயல்பட்ட தனியார் டிரைவ்இன் உணவு விடுதி வசம் இருந்த நிலத்தை கலைஞர் அரசு மீட்டு, செம்மொழிப் பூங்காவை உருவாக்கியது. மீதமுள்ள நிலத் துக்கு தோட்டக்கலை கிருஷ்ண மூர்த்தி தனிநபர் பட்டா பெற்று அவர் ஆக்கிரமிப்பு செய்து வைத்திருந்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு தொடர்ந்த சட்டப் போராட்டத்தால் மீதியுள்ள 6 ஏக்கர் நிலம் உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் வரை சென்று மீட்கப்பட்டுள்ளது.

**கலைஞர் நூற்றாண்டு பூங்கா!**

இந்த நிலத்தின் சந்தை மதிப்பு ரூபாய் ஆயிரம் கோடிக்கு மேல் இருக்கும். இந்த இடம் முழுவதுமாக அரசு கையகப்படுத்தி சீல் வைக்கப் பட்டுள்ளது. 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான, 115 கிரவுண்ட் நிலம் சட்டப் போராட்டம் மூலம் மீட்டதோடு ரூ.46 கோடி செலவில் உலகத்தரத்து டன் கலைஞர் பூங்காவாக மாற்றி திறந்து வைத்திருக்கிறார் முதலமைச் சர் அவர்கள்.

இந்த கோபம்தான் பழனிசாமிக்கு இப்போது ஜிப்லைன் பழுதில் வெளிப் பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவ ருக்கு மக்கள் நலன் எல்லாம் இல்லை. தனக்கும் சசிகலாவுக்கும் வேண்டப்பட்ட தோட்டக்கலை கிருஷ் ணமூர்த்தி ஆக்கிரமித்து வைத்தி ருந்த அரசு நிலம் திரும்ப பெற்று அதனை நவீன பூங்காவாக மாற்றி விட்டார்களே... என்ற ஆத்திரம்தான் காரணம்.

எதிர்க் கட்சித் தலைவர் அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளது போல் ஜிப் லைன் பழுதடையவில்லை.

ஜிப்லைன் என்பது பூங்காவில் புவி ஈர்ப்பு சக்தியை அடிப்படையாக கொண்டு செயல்படுகிறது.

பழுதடைவதற்கு இதில் ஒன்று மில்லை. மேலும் ஜிப்லைனில் இறங்கு தளத்திலேயே இறங்க இயலும்.

**பூங்காவில் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது!**

அவர்கள் சென்ற அந்த இருக் கைக்கு தேவையான உடல் எடைக் கும் இருந்த வேறுபாட்டின் காரண மாக ஒரு பத்து வினாடி அவர்கள் தேங்கினர். பின்னர் அவர்கள் சென்ற இருக்கைக்கு விசை கொடுக்கப்பட்டு அவர்கள் இறங்குதளம் சென்றடைந் தனர்.

ஆகவே எதிர்க் கட்சித் தலைவரின் அறிக்கை தவறானது.

இந்த பூங்காவில் உள்ள உப கரணங்கள் தரமானவையே.

இப்பூங்காவிற்குள் நுழைய பெரியவர்களுக்கு ரூ.100 சிறியவர் களுக்கு ரூ.50 என கட்டணம் நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஜிப் லைன், பறவையகம், கண்ணாடி மாளிகை, இசை நீரூற்று போன்றவை அந்தந்த சேவைக் கேற்ற குறைந்த கட்டணங்களே பெறப்படுகின்றன.

பூங்காவிற்கு வரும் அனைவரின் பாதுகாப்பும் உறுதி செய்யப்படுகிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் நேற்று (13.10.2024) நிதி, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மற்றும் கன்னி யாகுமரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா தலைமையில் வடகிழக்கு பருவமழையை எதிர் கொள்ள மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.சுந்தரவதனம், கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), செ.ராஜேஷ் குமார் (கிள்ளியூர்), திருமதி.தாரகை கத்பர்ட் (விளவங்கோடு), மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பி ரமணியம், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) பாபு, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய் குமார் மீனா உட்பட பலர் உள்ளார்கள்.